පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

**Department for Registration of Persons**

# කාර්ය සාධන වාර්තාව-2016

# செயல் மதிப்பீட்டு அறிக்கை-2016

# PERFORMANCE REPORT-2016




10 වන මහල, “සුහුරුපාය”, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල

10 ஆம் மாடி, “சுஹுரூபாய”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.

10th Floor, “Suhurupaya”, Sri Subuthipura Road,
Battaramulla

# செயல் மதிப்பீட்டு அறிக்கை

# 2016

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| **1.** | அறிமுகம் | **1** |
| | நோக்கக் கூற்று | **1** |
| | பணிக் கூற்று | **1** |
| | நோக்கங்கள் | **1** |
| | பிரதான கடமை | 1 |
| | திணைக்களத்தின் பொறுப்பு | 1 |
| **2.** | அடையாள அட்டை வழங்கல் | 2-**4** |
| | சாதாரண சேவை | 2 |
| | ஒரு நாள் சேவை | 3 |
| | விண்ணப்பங்கையேற்றல் மற்றும் அடையாள அட்டை விநியோகம் | 4 |
| 3. | தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்தும் வேலைத் திட்டம். | 5-7 |
| **4.** | அடையாள அட்டை வழங்கல் பணிகளின் பொருட்டு கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பம் என்பவற்றை பயன்படுத்தல். | 7 |
| **5.** | நடமாடும் சேவை | 7-9 |
| **6.** | பயிற்சி வழங்கல் செயற்பாடுகள் | 10 |
| **7.** | ஊக்கக் கொடுப்பனவு வழங்கல் | 10 |
| **8** | சட்டம் தொடர்பான கடமைகள் | 10 |
| **9.** | பௌதிக வள முகாமைத்துவம் | 10-11 |
| **10.** | நிதி முன்னேற்றம் | 12 |
| **11.** | பணிக்குழுக்கள் தொடர்பான தகவல்கள் | 13-14 |
| 12. | **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு** | 15-16 |
| 13. | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டம் | 17-21 |

# ஆட்பதிவுத் திணைக்களம்
# செயலாற்றுகை அறிக்கை
# 2016 ம் ஆண்டு

## 1. அறிமுகம்.

1968 ஆண்டின் 32 ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக 1972 ம் ஆண்டு முதல் வயது 18 க்கு மேற்பட்ட இலங்கையில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட நிரந்தரமாக குடியிருப்பவர்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆரம்பமாகியதுடன் அந்த சட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு ஏற்ப 2016 ம் ஆண்டு ஜுலை மாதம் 07 ஆம் திகதியிலிருந்து ஆட்களைப் பதிவு செய்யும் வயது 15 ஆக மாற்றப்பட்டது.

ஆரம்ப காலத்திலிருந்து கொழும்பு 05, கெப்பெட்டிபொல வீதி, இல. 38 முகவரியில் அமைந்திருந்த ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் 2016 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் பத்தரமுல்லை, ஸ்ரீ சுபுத்திபுர வீதியில் "சுஹுருபாய" கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- **நோக்கக் கூற்று**
  நம்பகரமான ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை

- **பணிக் கூற்று**
  சகல இலங்கைப் பிரஜைகளையும் உறுதிப்படுத்தும் ஆளடையாளம்.

- **நோக்கங்கள்**
  இந்நாட்டிற்குள் சகல இலங்கைப் பிரஜைகளினதும் மனித உரிமை, சமூக , பொருளாதார, அரசியல் மற்றும் சட்ட உரிமைகள் என்பவற்றை பாதுகாப்பதுடன், நாட்டை விட்டு செல்லும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பினை வழங்குதல், அவரது தரவுகளை உள்ளடக்கி தேசிய பிரஜைகளின் தரவு மையத்தினை உருவாக்குதல், எந்தவொரு பிரஜையினது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தேசிய மற்றும் வேறு நிறுவனங்களுக்கு தரவுகளை வழங்குதல் மற்றும் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பினை வழங்குதல்.

- **பிரதான கடமை**
  - சகல இலங்கைப் பிரஜையினதும் தனி நபர் தரவுகளை சேகரித்து தேசிய தரவுகள் மையமொன்றினை ஆரம்பித்து அதனை முன்னெடுத்துச் செல்லல்.
  - பொருத்தமான இலங்கைப் பிஜைகளுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்குதல்.
  - தேசிய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு அவசியமாகின்ற போது நபர்கள் தொடர்பான தரவுகளை விசாரித்தல், உறுதிப்படுத்தல் ,தரவுகள் மற்றும் அறிவை பரிமாற்றம் செய்தல்.

- **திணைக்களத்தின் பொறுப்பு**
  - சகல இலங்கைப் பிரஜையினதும் தனிநபர் தரவுகளை சேகரித்து தேசிய நபர்களின் தரவுகள் களஞ்சியத்தினை உருவாக்கி அதனை முன்னெடுத்துச் செல்லல்.
  - குறித்த வயதினை பூர்த்தி செய்த சகல இலங்கைப் பிரஜைகளும் பதிவு செய்யப்பட்டு தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தல்.
  - இலங்கைப் பிஜைகளது தனிநபர் தரவுகளை உறுதிப்படுத்தி அவற்றை அத்தாட்சிப்படுத்தல்.
  - அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தரவுகள் மற்றும் அறிவினை பரிமாற்றம் செய்தல்.
  - நவீன தொழிநுட்ப அறிவு மற்றும் மனித வளத்தினை விருத்தி செய்வதனூடாக திணைக்களத்தின் திறனை கட்டியெழுப்புதல்.
  - தேசிய பாதுகாப்பிற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பினை வழங்குதல்.

## 2. அடையாள அட்டை வழங்கல்.

- சாதாரண சேவை

2016 ஆண்டில் ஜனவரி 01 ம் திகதி முதல் திசம்பர் 31 ம் திகதி வரையான காலப் பகுதியில் சாதாரண சேவையின் கீழ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| மாதம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 36,614 | 48,358 |
| பெப்ரவரி | 33,608 | 36,144 |
| மார்ச்சு | 55,171 | 40,640 |
| ஏப்பிரல் | 73,096 | 35,972 |
| மே | 90,089 | 54,233 |
| ஜூன் | 106,021 | 54,506 |
| ஜூலை | 89,613 | 54,374 |
| ஆகஸ்ட் | 105,561 | 78,124 |
| செப்டம்பர் | 49,467 | 57,694 |
| ஒக்டோபர் | 61,869 | 74,237 |
| நவம்பர் | 59,839 | 62,104 |
| டிசம்பர் | 47,374 | 11,274 |
| **மொத்தம்** | **808,322** | **607,660** |

மேலேயுள்ள வகைப்படுத்தலில் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு, உரிய முறையில் பூரணப்படுத்தப் படாத மற்றும் வலிதற்றதாக்கப்பட்ட விண்ணப்பங்களாகும்.




கவனிக்க : சில மாதங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களுக்கு அதிகமாக விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பது உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளை தயாரிக்க முடியாமல் போனமையினாலாகும். ஏனைய மாதங்களில் அவ்விண்ணப்ப படிவங்களில் காணப்பட்ட குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றிற்கான தேசிய அடையாள அட்டைகளை தயாரித்தமையே சில மாதங்களில் பெற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்கு அதிகமாக விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை அதிகமானதற்கு காரணமாகும்.

- **ஒரு நாள் சேவை**

அவசர நிலைமைகளில் விரைவாக அடையாள அட்டைபெற்றுக் கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகளுக்காக ஒரே நாளில் அடையாள அட்டையை வழங்கும் விரைவு வேலைத்திட்டம் (ஒரு நாள் சேவை) 2003.09.01 ஆரம்பமாகியது. இதன் கீழ் ஓர் அடையாள அட்டைக்கு 500/- ரூபா அரசு அனுமதித்த கட்டணம் அறவிடப்பட்டதோடு 2015 ஜூலை மாதம் 01 ஆம் திகதி முதல் ஒரு நாள் சேவைக் கட்டணம் 1000/- ரூபாவாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

ஒரே நாள் சேவை வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டில் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் ஊடாக திணைக்களம் பெற்ற வருமானம் கீழ்வருமாறு :

| மாதம் | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 13039 | 13,039,000.00 |
| பெப்ரவரி | 16336 | 16,336,000.00 |
| மார்ச்சு | 15762 | 15,762,000.00 |
| ஏப்பிரல் | 8949 | 8,949,000.00 |
| மே | 14811 | 14,811,000.00 |
| ஜூன் | 19711 | 19,711,000.00 |
| ஜூலை | 17011 | 17,011,000.00 |
| ஆகஸ்ட் | 20333 | 20,333,000.00 |
| செப்டம்பர் | 16169 | 16,169,000.00 |
| ஒக்டோபர் | 19188 | 19,188,000.00 |
| நவம்பர் | 23635 | 23,635,000.00 |
| டிசம்பர் | 20426 | 20,426,000.00 |
| மொத்தம் | 205370 | 205,370,000.00 |



- **விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கல்**

| ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1972 | 1,305,801 | 22,459 | 1994 | 545,121 | 493,093 |
| 1973 | 5,570,696 | 680,024 | 1995 | 907,560 | 616,915 |
| 1974 | 619,855 | 5,071,234 | 1996 | 816,275 | 853,191 |
| 1975 | 72,268 | 248,694 | 1997 | 782,988 | 636,187 |
| 1976 | 138,216 | 246,694 | 1998 | 771,597 | 655,580 |
| 1977 | 152,221 | 221,783 | 1999 | 731,079 | 753,560 |
| 1978 | 236,834 | 423,276 | 2000 | 758,463 | 651,787 |
| 1979 | 186,813 | 194,436 | 2001 | 711,295 | 679,250 |
| 1980 | 360,510 | 297,702 | 2002 | 794,357 | 700,000 |
| 1981 | 479,724 | 474,577 | 2003 | 633,168 | 635,046 |
| 1982 | 425,904 | 505,559 | 2004 | 607,111 | 524,241 |
| 1983 | 358,830 | 342,088 | 2005 | 731,310 | 564,872 |
| 1984 | 451,651 | 421,010 | 2006 | 1,196,276 | 897,674 |
| 1985 | 446,619 | 458,557 | 2007 | 1,086,236 | 958,445 |
| 1986 | 364,150 | 374,074 | 2008 | 933,663 | 818,407 |
| 1987 | 372,108 | 353,819 | 2009 | 986,670 | 941,537 |
| 1988 | 431,102 | 409,870 | 2010 | 899,349 | 890,084 |
| 1989 | 365,966 | 333,083 | 2011 | 752,399 | 835,548 |
| 1990 | 491,622 | 397,135 | 2012 | 900,751 | 781,922 |
| 1991 | 676,681 | 646,150 | 2013 | 1,048,343 | 969,617 |
| 1992 | 568,493 | 545,957 | 2014 | 957,382 | 881,721 |
| 1993 | 528,628 | 468,494 | 2015 | 1,006,302 | 1,041,989 |
| | | | 2016 | 1,011,469 | 804,580 |
| | | | மொத்தம் | **34,173,856** | **29,763,476** |



3. **தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.**

- **சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டையினை அறிமுகப் படுத்தல்.**

  சிங்கள மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அடையாள அட்டைகள் எழுதப்பட்டு வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட இல. SC Appilication No.93/2013(F/R) என்ற மனித உரிமைகள் மனுவின் விசாரணை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தின் மூலம், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் வரை 2014.01.01 ம் திகதி முதல் சிங்கள மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது

  இதுவரை விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை கைகளால் எழுதப்பட்டு ஒரு மொழியில் மாத்திரமே வழங்கப்பட்டது. அடையாள அட்டை இரு மொழிகளிலும் கைகளால் எழுதப்படும் பட்சத்தில் அதற்காக செலவிடப்படும் கால அளவானது முன்னர் ஒரு மொழியில் மாத்திரமே எழுதப்படும் கால அளவினைவிடவும் இருமடங்கான கால அளவினை செலவிட வேண்டி வரும். அவ்வாறே அதற்காக தேவைப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாகும். இதற்கான தீர்வாக தகவல் தொழினுட்பத்தினை பயன்படுத்தி சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமான அச்சிடப்பட்ட அடையாள அட்டையினை 2014.02.28ம் திகதி முதல் விநியோகிக்கின்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

- **தற்காலிக எழுதுவினைஞர் ( தமிழ் மொழி ) ஆட்சேர்ப்பு செய்தல்.**

  தேசிய அடையாள அட்டை தயாரிப்பதற்காக விசேடமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட திணைக்கள் ஊழியர்களாகிய தயாரிப்பு உதவியாளர்களுக்கிடையே தமிழ் மொழியில் எழுத வேண்டிய அடையாள அட்டைகளை தமிழில் எழுதக் கூடியவர்கள் குறைவாக இருப்பதன் காரணமாக தமிழ் மொழியில் அடையாள அட்டை வழங்குதலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

  இது தொடர்பாக அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சிற்குச் செய்யப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு அமைய அந்த அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் (UNDP) உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் "நீதிக்கான சம வாய்ப்பு (Equal Access to Justice) செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 16 பேர் ஆரம்பத்தில் ரூபா 9000/- மாதாந்த கொடுப்பனவுக்கமைய தற்காலிக நியமனம் என்ற அடிப்படையில் எழுதுவினைஞர்களாக (தமிழ் மொழி) சேர்த்து கொள்ளப்பட்டார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் பின்வரும் முறையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.; இதற்கான ஒதுக்கீட்டு நிதி மேலே கூறிய செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

| கால வரையறை | எழுதுவினைஞர் எண்ணிக்கை | கொடுப்பனவு முறை |
|---|---|---|
| 2009.08.07 - 2009.11.06 | 16 | மாதாந்த கொடுப்பனவு ரூ.9000/- |
| 2009.11.16 - 2010.03.15 | 16 | |
| 2010.04.15 - 2010.08.31 | 23 | மாதாந்த கொடுப்பனவு ரூ.10000/- |
| 2010.09.15 - 2011.02.14 | 07 | மாதாந்த கொடுப்பனவு ரூ.15000/- |
| 2010.10.04 - 2011.02.14 | 23 | |
| 2011.08.01 – 2011.12.31 | 07 | |
| 2012.01.04 – 2012.05.31 | 07 | |
| 2012.06.06 – 2012.07.31 | 07 | |
| 2012.08.01 – 2012.12.31 | 07 | |
| 2013.04.08 – 2013.07.31 | 05 | |
| 2013.08.07 – 2013.12.31 | 07 | |
| 2014.05.16 – 2014.09.16 | 07 | |
| 2014.07.14 – 2014.09.16 | 01 | |
| 2014.11.01 – 2014.11.19 | 08 | |

❖ **ஒப்பந்த அடிப்படையில் தமிழ் மொழிமூல எழுதுனர்களை சேவையில் இணைத்தல்.**

2014.02.28ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமான அடையாள அட்டைகளை விநியோகிக்கும் புதிய கணனிமயப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைக்கேற்ப எல்லா அடையாள அட்டைகளும் தமிழ் மொழிக்கு மாற்றப்பட வேண்டுமென்பது அவசியமான விடயமாகும். அதற்காக திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள தமிழ் மொழி மூலம் கடமை புரியக்கூடிய உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக தமிழ் எழுதுனர்கள் 10 பேரை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்குறிப்பிட்டபடி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக கொள்ளப்பட்டனர்.

| காலப்பகுதி | எழுதுனர்களின் எண்ணிக்கை | கொடுப்பனவு முறை |
|---|---|---|
| 2014.11.21 – 2015.11.20 | 8 | ரூபா. 437/- |
| 2015.01.16 - 2016.01.15 | 2 | ரூபா. 437/- |
| 2015.11.21 - 2016.11.20 | 8 | ரூபா. 437/- |
| 2016.01.16 – 2017.01.15 | 1 | ரூபா. 437/- |
| 2016.11.21 – 2017.11.20 | 7 | ரூபா. 437/- |

❖ **சிவில் பாதுகாப்பு அலுவலர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல்.**

தேசிய அடையாள அட்டை தயாரித்தல் செயன்முறையில் நேரடி பங்களிப்பினை வழங்கிய உற்பத்தி உதவியாளர் தொகுதி உத்தியோகத்தர்கள் தர உயர்வுகள் பெற்று வேறு சேவைகளுக்குச் இணைக்கப்பட்டு சென்றமையினால் அடையாள அட்டை தயாரிக்கும் நடவடிக்கையில் இணைக்கப்படும் அலுவலர்கள் வரையறுக்கப்பட்டனர். அதனால், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 47 பேர் 2010.09.20 ம் திகதி முதல் 2015 வரை இத் திணைக்களத்தில் சேவைக்காக அமர்த்தப்பட்டனர். 2014 ஆண்டு ஜனவரி மாதம் முதல் அவ்வுத்தியோகத்தர்களில் 16 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 2015 ஆண்டு முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிய உத்தியோகத்தர்கள் இத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டதுடன் 2015.10.13 ஆம் திகதி முதல் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவை நிறுத்தப்பட்டது.

❖ **செய்முறைப் பயிற்சி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.**

மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கு மேலதிகமாக தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்ற மாணவர்களையும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நாளொன்றுக்கு ரூபா 500 என்ற கொடுப்பனவு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

| கால வரையறை | பயிலுனர்களின் எண்ணிக்கை | தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|
| 2011.08.10 – 2012.02.09 | 6 | தேசிய இளைஞர் சேவை மன்றம் |
| 2011.08.15 – 2012.02.14 | 4 | லலித் அதுலத்முதலி தொழிற்பயிற்சி நிலையம் |
| 2011.12.08 – 2012.06.07 | 1 | தெஹிவளை தொழிற்பயிற்சி நிலையம் |
| 2012.04.02 – 2012.10.01 | 4 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை |
| 2012.04.20 – 2012.10.19 | 1 | கம்பஹா தொழிநுட்ப கல்லூரி |
| 2012.10.01 – 2013.03.31 | 2 | இலங்கை கொரிய தொழிநுட்ப கல்லூரி |
| 2012.12.10 – 2013.06.09 | 1 | கம்பஹா தொழிநுட்ப கல்லூரி |
| 2013.01.21 – 2013.07.20 | 2 | லலித் அதுலத்முதலி தொழிற்பயிற்சி நிலையம் |
| 2014.07.07 – 2015.01.06 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.07.15 – 2015.01.14 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.02.18 – 2014.07.04 | 1 | இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிருவகம் |
| 2014.02.18 – 2014.08.17 | 2 | இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிருவகம் |

| | | |
|---|---|---|
| 2014.04.28 – 2014.10.27 | 1 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |
| 2014.05.20 – 2014.11.19 | 4 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |
| 2014.07.07 – 2015.01.06 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.07.15 – 2015.01.14 | 1 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை |

- 2015.01.14 ஆம் திகதி முதல் இது வரை பயிற்சிக்காக பயிலுன மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

## 4. அடையாள அட்டை வழங்கல் பணிகளின் பொருட்டு தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்.

- **கணனிக்கு அமைய இலக்கம் இடுதல்.**

  முதல் முறையாக வழங்கப்படும் அடையாள அட்டை தொடர்பில் இலக்கம் வழங்குதல் 2007 ஜனவரி 01 ம் திகதி முதல் திணைக்களத்தில் இடம் பெற்று வகின்றது.

- **கணனியை பயன்படுத்தி அடையாள அட்டை தயாரித்தல்**

  கணனியை பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கும் முறை 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

- **கணனி சுட்டட்டைகளை வழங்கல்.**

  தொலைந்து போன அடையாள அட்டைகள் தொடர்பில் இணைப் பிரதி வழங்கும் போது மற்றும் வைத்திருக்கும் அடையாள அட்டையில் திருத்தங்கள் செய்யும் போது தேவைப்படும் திணைக்கள அறிக்கை (சுட்டட்டைகளை ) தேடுதல் கையால் மேறகொள்ளப்பட்ட ஒரு பணியாகும். தற்போது அந்த சுட்டட்டைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதால் அவை கணனி ஊடாக ஆய்வு செய்யப்படுகின்றன.

## 5. நடமாடும் சேவை.

தேர்தலில் வாக்களித்தலுக்கு அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதனால் நடமாடும் சேவை விரைவாக இடம் பெறச் செய்ய வேண்டியேற்பட்டது. இந்த நடமாடும் சேவை ஊடாக தூர இடங்களில் வசிக்கும் மக்களிடம் சென்று பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களைப் பொறுப்பேற்றல் இடம் பெறுகின்றது. நிலைய மட்டத்தில் செயற்படுத்தப்படும் நடமாடும் சேவை வேலைத் திட்டத்தின் கீழ் 2016 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரைக்கும் 30,415 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

| தொ. இல. | திகதி | இடம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2016.01.14 | ஹொரண, குருகொட, பொடிலைன் நிறுவனம் | 330 |
| 2 | 2016.01.20 | டொயோட்டா லங்கா, வத்தளை | 75 |
| 3 | 2016.01.30 | மத்தும பண்டார கனிஷ்ட வித்தியாலயம் | 130 |
| 4 | 2016.01.31 | ராகமை, குருகுலாவ புனித லாசரஸ் வித்தியாயலம் | 40 |
| 5 | 2016.02.12 | குளியாப்பிட்டி, மாஸ் ஹோல்டின்ஸ் நிறுவனம் | 75 |
| 6 | 2016.02.26 | கண்டி, மாநகர சபை வளாகம் | 248 |
| 7 | 2016.03.12 | சவுத் ஏசியா எபரல்ஸ் தனியார் கம்பனி | 105 |
| 8 | 2016.03.18 | ஊவா மாகாண நூலக சேவை சபை வளாகம் | 15 |
| 9 | 2016.03.29 & 2016.03.30 | கொழும்பு சட்டத்தரணிகள் சங்கம் | 63 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 2016.04.01 & 2016.04.02 | கண்டி, மாநகர சபை வளாகம் | 60 |
| 11 | 2016.04.02 | கஹபொல விகாரை | 40 |
| 12 | 2016.04.07 | 683 படை தலைமையகம் | 40 |
| 13 | 2016.04.07 | 683 படை தலைமையகம் | |
| 14 | 2016.04.07 | சவுத் ஏசியா கேட்வே தனியார் கம்பனி | 19 |
| 15 | 2016.05.04 | சிறைச்சாலைகள் ஊழிய முகாம் | 48 |
| 16 | 2016.05.04 | தேசிய விளைதிறன் செயலகம் | 142 |
| 17 | 2016.05.17 | ஓய்வூதிய திணைக்களம் | 78 |
| 18 | 2016.05.17 | ஸ்ரீ ஜயவர்தன புர வைத்தியசாலை | 59 |
| 19 | 2016.06.14 - 2016.06.15 | கஹதுடுவ, ஹைட்ராமனி தொழிற்சாலை | 208 |
| 20 | 2016.06.16 | ரத்மலானை தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர்வடிகாலமைப்பு சபை | 166 |
| 21 | 2016.06.16-21 | பிபிலை பிரதேச செயலகம் | 1800 |
| 22 | 2016.06.16-21 | மெதகம் பிரதேச செயலகம் | |
| 23 | 2016.06.16-21 | ரத்துகல பிரதேச செயலகம் | |
| 24 | 2016.06.16-21 | புத்தள பிரதேச செயலகம் | |
| 25 | 2016.06.16-21 | படல்கும்புர பிரதேச செயலகம் | |
| 26 | 2016.06.23-27 | வெல்லவாய பிரதேச செயலகம் | 1200 |
| 27 | 2016.06.23-27 | தணமல்வில பிரதேச செயலகம் | |
| 28 | 2016.06.23-27 | செவனகல பிரதேச செயலகம் | |
| 29 | 2016.06.23-27 | கதிர்காமம் பிரதேச செயலகம் | |
| 30 | 2016/06/24 | களனி பிரதேச செயலகம் | 154 |
| 31 | 2016.06.28 | பத்தரமுல்லை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | 81 |
| 32 | 2016.07.01 | கொஹிலவத்தை சிறி பியதர்ஷிநாராம | 187 |
| 33 | 2016.07.01-2016.07.02 | மெதிரிகிரிய பிரதேச செயலகம் | 605 |
| 34 | 2016.07.07-2016.07.12 | எலஹெர பிரதேச செயலகம் | 2160 |
| 35 | 2016.07.07-2016.07.12 | ஹிங்குராங்கொடை பிரதேச செயலகம் | |
| 36 | 2016.07.07-2016.07.12 | வெலிகந்த பிரதேச செயலகம் | |
| 37 | 2016.07.14 | மாத்தறை பிரதேச செயலகம் | 65 |
| 38 | 2016.07.15 | தம்புள்ளை கம் உதா விளையாட்டரங்கம் | 258 |
| 39 | 2016.07.16-2016.07.17 | திம்புலாகல பிரதேச செயலகம் | 1213 |
| 40 | 2016.07.16-2016.07.18 | லங்காபுர பிரதேச செயலகம் | |
| 41 | 2016.07.22-2016.07.23 | தமன்கடுவ பிரதேச செயலகம் | 850 |
| 42 | 2016.07.30 | பொலன்னறுவை றோயல் கல்லூரி | 523 |
| 43 | 2016.08.06 | ஹீன்கெந்த மகா வித்தியாலயம் | 45 |
| 44 | 2016.08.16 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை கூட்டுத்தாபனம் | 54 |
| 45 | 2016.08.29 | கஹவத்தை பிரதேச செயலகம் | 275 |
| 46 | 2016.09.01 | அட்டாளச்சேனை பிரதேச செயலகம் | 69 |
| 47 | 2016.09.03 | கொ/சீவலி மத்திய மகா வித்தியாலயம் | 138 |
| 48 | 2016.09.03 | ஸ்ரீ போதிரதநாராம விகாரை | 114 |
| 49 | 2016.09.10 | ஹோமாகம தேர்தல்கள் பிரிவு | 38 |
| 50 | 2016.09.16 | வெலிவேரிய கிறிஸ்துவ கல்லூரி | 160 |
| 51 | 2016.09.18 | மாத்தளை ஸாஹிரா கல்லூரி | 90 |
| 52 | 2016.09.21 | திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 32 |
| 53 | 2016.09.24 | எவரிவத்த விளையாட்டரங்கம் | 121 |

| | | | |
|---|---|---|---|
| 54 | 2016.10.13 | கரைச்சி பிரதேச செயலகம் | 493 |
| 55 | 2016.10.14 | பூநகரி பிரதேச செயலகம் | |
| 56 | 2016.10.20 | கண்டாவளை பிரதேச செயலகம் | 475 |
| 57 | 2016.10.21 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் | |
| 58 | 2016.10.20 | யக்கல பழைய சந்தை | 44 |
| 59 | 2016.10.23 | நாலந்தா வித்தியாலயம் | 15 |
| 60 | 2016.10.30 | நியாகம பிரதேச செயலகம் | 2,772 |
| 61 | 2016.10.31 | வெலிவிட்டிய - திவிதுர பிரதேச செயலகம் | |
| 62 | 2016.11.02 | எல்பிட்டி பிரதேச செயலகம் | |
| 63 | 2016.11.03 | பத்தேகம் பிரதேச செயலகம் | |
| 64 | 2016.11.05 | ஹிக்கடுவை (ரத்கம) பிரதேச செயலகம் | 2,232 |
| 65 | 2016.11.06 | அம்பலாங்கொடை பிரதேச செயலகம் | |
| 66 | 2016.11.07 | கடவத் சதர பிரதேச செயலகம் | |
| 67 | 2016.11.11 | லுணுகம்வெஹர பிரதேச செயலகம் | 84 |
| 68 | 2016.11.12 | மாபோலை நகர சபை ... | 200 |
| 69 | 2016.11.12 | ஹபராதுவ பிரதேச செயலகம் | 4,031 |
| 70 | 2016.11.13 | இமதுவ பிரதேச செயலகம் | |
| 71 | 2016.11.14 | யக்கலமுல்ல பிரதேச செயலகம் | |
| 72 | 2016.11.16 | ஹிக்கடுவை (பெரேலிய) பிரதேச செயலகம் | |
| 73 | 2016.11.17 | பெந்தோட்டை பிரதேச செயலகம் | |
| 74 | 2016.11.18 | மொபிடெல் நிறுவன தலைமைக் காரியாலயம் | 46 |
| 75 | 2016.11.19 | கிரிமெட்டியாகார புனித அந்தோனியார் தேவாலயம் | 173 |
| 76 | 2016.11.20 | பலப்பிட்டி பிரதேச செயலகம் | 2297 |
| 77 | 2016.11.21 | கரந்தெனிய பிரதேச செயலக பிரிவு | |
| 78 | 2016.11.22 | கொம்பனித்தெரு 175- சன சமூக நிலையம் | 112 |
| 79 | 2016.11.25 | நெலுவ பிரதேச செயலக பிரிவு | 1873 |
| 80 | 2016.11.27 | அக்மீமன பிரதேச செயலக பிரிவு | |
| 81 | 2016.11.26 | எண்டேரமுல்ல புனித செபஸ்தியன் வித்தியாலயம் | 464 |
| 82 | 2016.11.26 | வெல்லம்பிட்டி வேரகொட கனிஷ்ட வித்தியாலயம் | 220 |
| 83 | 2016.11.27 | கட்டியல ஸ்ரீ வாலுகாராமை | 122 |
| 84 | 2016.12.02 | கோனபீனுவல பிரதேச செயலகம் | 2,275 |
| 85 | 2016.12.03 | போபே பொத்தல பிரதேச செயலகம் | |
| 86 | 2016.12.04 | தவலம பிரதேச செயலகம் | |
| 87 | 2016.12.05 | பத்தேகம (வந்துரம்ப) பிரதேச செயலகம் | |
| 88 | 2016.12.06 & 2016.12.07 | புதுக்கடை நீதிமன்ற அருகாமை | 107 |
| 89 | 2016.12.11 | கெரவலப்பிட்டிய வித்தியாலோக மகா வித்தியாலயம் | 178 |
| 90 | 2016.12.17 | சவுத் ஏசியா எபரல்ஸ் நிறுவனம் | 29 |
| | **2016.12.31 வரை நடமாடும் சேவையின் ஊடாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொகை** | | **30,415** |

## 6. பயிற்சி வழங்கல் செயற்பாடுகள்.

இத்திணைக்கள உத்தியோகத்தர்களின் பெறுபேற்றினை விருத்தி செய்வதற்காக 2016 ம் ஆண்டு பூராகவும் அவர்கள் வெவ்வேறுபட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றி இருந்தார்கள். இதனூடாக திணைக்களத்தில் வினைத்திறனுடனான சேவை செய்யவும் மக்களுக்கு உடனடியான சேவையினை வழங்கவும் இது பெரிதும் உதவியாக காணப்பட்டது.

2016 ம் ஆண்டில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பெற்ற பயிற்சிகள் சம்பந்தமாக இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

## 7. ஊக்கக் கொடுப்பனவு வழங்கல்

2003 ம் ஆண்டு முதல் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளின் பேரில் ஒரே நாளில் அடையாள அட்டை வழங்கும் பொருட்டு ஒரு நாள் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஒரு நாள் சேவை பணிக்குழு தொடர்பான முறையான அனுமதியுடன் ஊக்கக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இவ்வூக்கக் கொடுப்பனவானது 2016 ம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

## 8. சட்டம் தொடர்பான கடமைகள்

குறைபாடுகள் கொண்ட விண்ணப்ப படிவம் சமர்ப்பித்தல், ஐயம் கொள்ளக் கூடிய விண்ணப்ப படிவ இலக்கத்தை உறுதிப் படுத்தல், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊடாக கோரப்படும் விளக்கங்களுக்குப் பதில் அளித்தல், ஐயத்துக்கிடமான பிறப்புச் சான்றிதழை ஆய்வு செய்தல் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தினை மீறுதல் போன்றவற்றிற்கு தண்டம் அறவிடல் போன்றவை தொடர்பில் 2016 ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சம்பந்தமான விபரம் இணைப்பு II ல் தரப்பட்டுள்ளது:-

## 9. பௌதிக வளங்களை முகாமைத்துவம் செய்தல்

- **காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

இலக்கம் 45, கெப்பிட்டிபொல வீதி, கொழும்பு - 05 என்ற இடத்தில் அமைந்திருக்கும் கட்டிடங்கள் திணைக்களத்துக்குச் சொந்தமானது.

- **வாடகைக்கு எடுத்தல்**

திணைக்களத்தின் விண்ணப்ப படிவங்களை களஞ்சியப் படுத்துவதன் பொருட்டு நுகேகொடையில் அமைந்துள்ள 12,180 சதுர அடி பரப்பளவுள்ள " யமுனா கட்டிடத்தை " சகல குத்தகைத் தொகையுடன் ரூபா 527,250/= மாதாந்த வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

- **ஏனைய சொத்துக்கள்**

தற்போது திணைக்களத்துக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :-

| | இலக்கம் | வாகனம் | வகை | கொள்வனவு செய்த திகதி | கொள்வனவு செய்த பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | NA 2147 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2006.05.24 | 4,450,000.00 |
| 2 | KB 8577 | கார் | நிசான் ஸனீ சுபர் செலூன் | 2006.05.23 | 3,400,000.00 |
| 3 | PA 9855 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2006.11.22 | 4,250,000.00 |
| 4 | PB 6775 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2008.08.11 | 6,250,000.00 |
| 5 | PC 3265 | கெப் (CAB) வாகனம் | மகேந்திரா பொலெரோ | 2011.06.28 | 2,627,353.00 |
| 6 | KP 5832 | ஜீப் வாகனம் | மகேந்திரா ஸ்கோபியோ | 2011.08.18 | 4,587,528.00 |
| 7 | WP 6059 | மோட்டார் சைக்கிள் | டீவீஎஸ் - ஸ்டார் ஸ்போர்ட் | 2011.06.14 | 104,496.00 |
| 8 | PE 1266 | கெப் வாகனம் | டொயோடா ஹைலக்ஸ் | 2012.06.13 | 7,500,000.00 |
| 9 | KX 7866 | கார் | நிசான் சில்பி | 2014.01.19 | 9,390,000.00 |
| 10 | PF7780 | கெப் (CAB) வாகனம் | மிட்சுபிசி L200 | 2014.12.18 | 6,390,000.00 |
| 11 | CAN6891 | கார் | நிசான் சனீ N17 | 2015.12.08 | 5,795,000.00 |
| 12 | CAN7833 | கார் | நிசான் சனீ N17 | 2015.12.10 | 5,795,000.00 |
| 13 | KF6282 | கார் | டாட்டா இந்திகோ | 2016.08.01 | 1,935,000.00 |

10. **நிதி முன்னேற்றம்**

- **2016 ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு மற்றும் செலவுகள் பின்வருமாறு**

| இல |  | செயற்பாடுகள் | செலவு திட்டம் 2015 (ரூ.ஆயிரத்தில்) | செயல்மதிப்பீடு (ரூ. ஆயிரத்தில்) 2015.12.31 | |
|---|---|---|---|---|---|
|  |  | மீண்டுவரும் செலவினம் |  |  |  |
| 1 |  | தனிநபர் சம்பளம் | 549,700 | நிதி | 543,412 |
|  |  |  |  | பௌதீக |  |
| 2 |  | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 84,210 | நிதி | 82,851 |
|  |  |  |  | பௌதீக |  |
|  |  | மொத்த மீண்டுவரும் செலவினம் | **633,910** |  | **626,263** |
|  |  | நடைமுறைச் செலவு |  |  |  |
|  |  | நிலையானசொத்துக்களை புனர்நிர்மானம் செய்தலும் அபிவிருத்தி செய்தலும் |  |  |  |
| 3 | 2001 | கட்டிடமும் கட்டிட நிர்மாணமும் | 5,500 | நிதி | 5,090 |
|  |  |  |  | பௌதீக | 3 |
| 4 | 2002 | இயந்திரமும் இயந்திர பொருத்திகளும் | 500 | நிதி | 453 |
|  |  |  |  | பௌதீக | 1 |
| 5 | 2003 | வாகனங்கள் | 500 | நிதி | 499 |
|  |  |  |  | பௌதீக | 4 |
|  |  | நிலையான சொத்துக்களை கையேற்றல் |  |  |  |
| 6 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,000 | நிதி | 1,747 |
|  |  |  |  | பௌதீக | 7 |
| 7 | 2103 | இயந்திரமும் இயந்திர பொருத்திகளும் | 3,500 | நிதி | 3,458 |
|  |  |  |  | பௌதீக | 53 |
|  |  | மனித வள அபிவிருத்தி |  |  |  |
| 8 | 2401 | அலுவலர்களுக்கான பயிற்சி(அ) | 1,200 | நிதி | 1,188 |
|  |  |  |  | பௌதீக | 435 |
|  |  | ஏனைய நிலையான செலவு |  |  |  |
| 9 | 2502 | முதலீடு | 75,000 | நிதி | 75,000 |
|  |  |  |  | பௌதீக | *1,411,849 |
|  |  | நடைமுறை செலவின் மொத்தம் | 88,200 | நிதி | 87,435 |
|  |  |  |  | பௌதீக |  |
|  |  | மொத்தச் செலவு | 722,110 | நிதி | 713,698 |

| | | |
|---|---|---|
| * - பாதுகாப்பான வெற்று அட்டை | - | 600,000 |
| - லெமினேடிங் ரோல் | - | 1,840 |
| - அச்சிடப்பட்ட அ.அட்டை | - | 810,009 |
|  |  | **1,411,849** |

- **2015 ம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு மற்றும் வருமானம் கீழ் வருமாறு**

| செயற்பாடுகள் | வருமான மதிப்பீடு 2015 (ரூ.) | செயல்மதிப்பீடு 2016.12.31 (ரூ.) |
|---|---|---|
| ஒரு நாள் சேவை வருமானம் | 140,000,000 | 205,370,000 |
| தண்டப்பணம்/ கட்டணம் | 3,000,000 | 21,045,896 |
| முத்திரை வருமானம் | 7,000,000 | 8,980,434 |
| மொத்தம் | 150,000,000 | 235,396,330 |

## 11. பணிக்குழு விபரம்

பணிக்குழுவின் புதிய நியமனம்,ஓய்வு பெறுதல், பதவி விலகல், இடமாற்றம், விடுவித்தல் மற்றும் உயர்பதவி ஆகிய உத்தியோகத்தர் எண்ணிக்கை கீழ் வருமாறு

### I. புதிய ஆட்சேர்ப்பு

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்கள் 13 பேர்
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள் 20 பேர்
- சாரதி சேவையில் 02 பேர்

### II. இளைப்பாறியோர்

- அரச முகாமைத்துவ சேவை தரம் I 03 பேர்
- அரச முகாமைத்துவ சேவை தரம் II 03 பேர்
- அரச முகாமைத்துவ சேவை தரம் III 01 பேர்
- அலுவலக உதவியாளர் சேவை தரம் I ஒருவர்.

### III. இராஜினாமா செய்தல்

- அரச முகாமைத்துவ சேவை தரம் III 02 பேர்
- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் ஒருவர்.

### IV. இடமாற்றம்

- இலங்கை நிர்வாக சேவையில் உத்தியோகத்தர்கள் 2 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர்கள் 02 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் I இல் 05 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர் 06 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் II இல் ஒருவர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 05 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இல் 06 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 10 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அமுலாக்கல் உத்தியோகத்தர் சேவையில் 03 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 17 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர் 14 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- தகவல் தொழிநுட்ப உதவியாளர் சேவையில் 02 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் ஒருவர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அலுவலக உதவியாளர் சேவையில் 03 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 04 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.

## V. சேவை விடுவிப்பு

- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து 02 பேர்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 19 பேர்

## VI. பதவி உயர்வு

- இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியோகத்தர் ஒருவர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.
- இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியோகத்தர் ஒருவர் தரம் II இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் II உத்தியோகத்தர் ஒருவர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார் ,
- உற்பத்தி உதவியாளர் சேவை ஊழியர்கள் 05 பேர் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.
- அலுவலக உதவியாளர் சேவை தரம் II ஊழியர் இருவர் அலுவலக உதவியாளர் சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.

## VII. இறப்பு

- அலுவலக உதவியாளர் சேவையில் ஊழியர் ஒருவர்

திணைக்களத்தின் பணியாளர்கள் பற்றிய விபர அறிக்கை இணைப்பு (III) இல் காணலாம்

## 12. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

- ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் அதுவரை வெற்றிடமாகக் காணப்பட்டு வந்த பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி, 2015.11.03 ஆம் திகதி உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பூர்த்தி செய்யப்பட்டது.

- திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுகளுடன் தொடர்புடைய மீளாய்வு நடவடிக்கைகள், கணக்காய்வு விளக்கங்களுக்கு மறுமொழி/ பதில் அளிப்பதில் காணப்படுகின்ற முன்னேற்றம், வருடாந்த செயற் திட்டத்தினதும், கொள்முதல் திட்டத்தினதும் முன்னேற்றம் உள்ளிட்ட பிற நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக உரிய சுற்றறிக்கைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல், மேற்பார்வை செய்தல் மற்றும் வித்தியாசங்கள்/ வேறுபாடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியவாறு, 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், முறையே 2016.01.29, 2016.05.12, 2016.10.19, 2016.12.29 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டன.

- மேற்சொன்ன திகதிகளில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மூலம் கீழ்க் காட்டப்பட்ட விடயங்களை அவதானித்தலும், நுண்ணாய்வு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

    - 2015 ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கையையும், 2016 ஆம் வருடத்திற்கான செயற் திட்டத்தையும், உரிய திகதிகளில் பாராளுமன்றத்திற்கும், நேர்வரிசை அமைச்சிற்கும் சமர்ப்பிப்பதற்குத் தேவையான பணிப்புரைகளை வழங்குதலும், அந் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்.

    - திணைக்கள வளவில் இருந்த ஆதனங்கள் காணாமல் போனமை தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப விசாரணைகளுடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்து, தேவையான மேற்பார்வைகளை மேற்கொண்டு, அதற்குரிய பணத்தை உரிய நபரிடமிருந்து அறிவிட்டுக் கொள்வதற்கு பணிப்புரை வழங்குதல்.

    - வருடாந்த வாகனச் செலவு அறிக்கை, நிலையான சொத்துகள் பேரேடு, கணினி ஆதனங்கள் பேரேடு முதலான பேரேடுகளை முறையாகப் பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்குதலும், அந் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்.

    - செயற் திட்டம், நி.பி. 135 இன் பிரகாரம் தத்துவமளித்தல், ஒதுக்கீட்டுக் கணக்கு, முற்பண 'பி' கணக்கு, கடந்த வருட பொருட் கணிப்பீட்டு அறிக்கைகள், வருமானக் கணக்குகள் முதலான வருடாந்தம் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை சரியாகத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு பணிப்புரை வழங்குதல், அவற்றின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

    - நிதி முன்னேற்ற அறிக்கை, பௌதீக முன்னேற்ற அறிக்கை, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள், கட்டுநிதிக் கணக்கிணக்கக் கூற்றுகள், வைப்புப் கணக்கிணக்கக் கூற்றுகள் முதலான மாதாந்தம்/ காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதலும், அந் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்.

    - பிரதேச அலுவலகங்களிலும், மாகாண அலுவலகங்களிலும் நிலவும் நிருவாகப் பிரச்சினைகள் தொடர்பில் அவதானித்தலும், அந் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்.

- திணைக்களம் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்பட்ட 18 கணக்காய்வு விளக்கக் கோரிக்கைகளுக்கு 2016 ஆம் வருடத்தில் பதிலளித்து முடித்தல்.

- 2015 ஆம் வருடத்திற்கு உரியதாக களஞ்சியசாலை பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை விநியோகம் என்பன தொடர்பாக கணக்காய்வுகளை மேற்கொண்டு, கணக்காய்வு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

- 2015 ஆம் வருடத்திற்கு உரியதாக ஒருநாள் சேவை அடையாள அட்டை விநியோகம் மூலம் பெறப்பட்ட வருமானங்களைப் பரீட்சித்து, கணக்காய்வு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

- 2015 ஆம் வருடத்தின் நவெம்பர், திசெம்பர் அதே போன்று 2016 ஆம் வருடத்தின் ஜனவரி மாதம் ஆகிய மாதங்களுக்கான சம்பளப் பேரேடுகளையும், சம்பளக் கொடுப்பனவுகளையும் பரீட்சித்து, கணக்காய்வு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

- e-NIC கருத்திட்டத்தின் 2016 ஆம் வருடத்தின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான கொடுப்பனவுகளைப் பரீட்சித்தல்.

- 2016 மார்ச் மாதத்தில் அடையாள அட்டைகள் காணாமல் போனமை பற்றி விசாரணையொன்றை மேற்கொண்டு, உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

- 2016 சனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை ஒருநாள் சேவை வருமானங்களைப் பரீட்சித்து, கணினி முறைமையில் காணப்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் அவதானிப்புகளை மேற்கொண்டு, அக் கோளாறுகளைச் சரி செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

- 2016 ஆம் வருடத்தில் வாகனங்களைப் பாவித்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சித்தல்.

- 2016 ஆம் வருடத்தில் திணைக்களப் பணியாட் தொகுதியின் விடுமுறைகள் தொடர்பில் பரீட்சித்தல்.

- இவற்றிற்கு மேலதிகமாக 2016 ஆம் வருடத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளையும், மாதாந்த கணக்கு அறிக்கைகளையும் பரீட்சித்தல்.

## 13. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம்

### 1. கருத்திட்டத்தின் நோக்கம்

- 15 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளின் தரவுகள், உயிரியியல் பண்பு ரீதியான தரவுகளை உள்ளடக்கிய தேசிய பிரஜைகளின் தரவுத் தளத்தினை உருவாக்குதல்
- தற்பொழுது பாவனையிலுள்ள தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக தனிநபர் ஆளடையாளத்தை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தல்.
- அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தகவல் பறிமாற்றிக் கொள்ளும் மற்றும் தகவல் உறுதிப்படுத்திக்கொள்ளும் செயல்முறைமையினை ஸ்தாபித்தல்.
- தேசிய பாதுகாப்பிற்கு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான வசதிகளை வழங்கல்.

### 2. செயற்திட்ட பிரதான பொறுப்புக்கள்

- தேசிய பிரஜைகளின் தரவுத்தளத்தினை நிர்மாணித்தல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான ஆட்களைப் பதிவு செய்யும் சட்டமூலத்தினை திருத்தம் செய்தல் மற்றும் அதற்கான வரைபுகளை தயார்ப்படுத்தல்.
- செயற்திட்ட இயக்க செயற்பாடுகளை மீளமைத்தல்
- தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கை தொடர்பாக ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் கிளைக் காரியாலயங்களை  செயலாற்று மத்திய நிலையங்களாக நிறுவுதல் மற்றும்  தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- பாவனையிலுள்ள அடையாள அட்டையினை புதிய படிவத்திற்கு அமைய பிளாஸ்டிக் அட்டையில் விநியோகித்தல்.
- பத்தரமுல்லையில் அமைந்துள்ள SPI கட்டிடத்தில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் இலத்திரனியல்  அடையாள அட்டை செயற்திட்ட இயக்க கிளை என்பவற்றை ஸ்தாபித்தல்.
- தகவல் தொழிநுட்ப அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தரவு சேகரித்தல்  நிகழ்ச்சித்திட்டத்தினை ( Data Capturing Programme) செயற்படுத்தல்.
- தரவு இலத்திரனியல்படுத்தல் (Digitizing) மற்றும் தரவு சரிபார்த்தல். (Data Verification)
- பிரஜைகளின் தரவுகளை மற்றும் உயிரியியல் பண்பு ரீதியான தரவுகள் மற்றும் ICAO தரத்தில் பெற்றுக்கொண்ட புகைப்படம் உள்ளடங்களாக பிரஜைகளின் தரவுத் தளத்தினை அமைத்தல்.
- இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல்.
- தகவல் பரிமாற்றம் செய்தல் மற்றும்  தகவல் உறுதிப்படுத்தல் செயன்முறையினை  ஸ்தாபித்தல்.

### 3 . திருத்தப்பட்ட கருத்திட்டத் திட்டத்தை அமுல் செய்தல்

#### 3.1 பின்னணி

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீவிலுள்ள எல்லா அரச மற்றும் தனியார் நிறுவனங்களும், வினைத்திறனுடன் தமது சேவைகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் தொழிற்பாட்டின் போது, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற பிரதான ஆவணம் அடையாள அட்டையாகும். ஆட்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற தேசிய அடையாள அட்டை, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் பிரகாரம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் 1972 தொடக்கம் மனித உழைப்பை மட்டும் பயன்படுத்தி விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த முறையினுள் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டில்லாமை முதலான காரணிகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதன் காரணமாக, பொது மக்கள், பொது மக்களுக்கான சேவை வழங்கும் நிறுவனங்கள் அதே போன்று இத் திணைக்களமும் பாரிய சிரமங்களுக்கும், அசௌகரியங்களுக்கும் முகங் கொடுத்துள்ளன. இதன் காரணமாக நாட்டின் தேசிய பாதுகாப்பையும், நபர்களின் பாதுகாப்பையும்

உறுதிப்படுத்துவது என்பது சிரமமான காரியமாக அமைந்துள்ளது. மேலும், அடையாள அட்டையைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள்/ உபகரணங்கள் காலங் கடந்திருத்தல், இவற்றுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை சந்தையில் பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல், அடையாள அட்டைக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்பான அட்டைகளை சந்தையில் பெற்றுக் கொள்வது சிரமமாக இருத்தல் முதலான காரணிகள் காரணமாக, அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணியானது, திணைக்களத்திற்கு பெரிதும் சிரமமான காரியமாக அமைந்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள அடையாள அட்டையிலும், அதனை விநியோகிக்கும் நடைமுறையிலும் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக, பிரஜைகளைப் பதிவு செய்வதற்கான இலத்திரனியல் தரவுக் களஞ்சியமொன்றை அமைத்து, அதனடிப்படையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையொன்றை விநியோகிக்கும் கருத்திட்டத்திற்கு 2011.08.17 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்சமயம் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல், ஆவணங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதால், அப் பணி சரியாக இடம்பெறுவதில்லை என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. எனவே, உயிர்மானத் தரவுகளாக ஆட்களின் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம், ஆட்களின் அடையாளத்தை மிகச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடிவதால், புதிய முறைக்கு அமைய 15 வயதுக்கு மேற்பட்ட எல்லா இலங்கைப் பிரஜைகளினதும் உயிர்மானத் தரவுகளாக கைவிரல் அடையாளம் உள்ளடக்கப்பட்ட, நபர் தொடர்பான விபரங்கள், குடும்பம் தொடர்பான விபரங்கள் மற்றும் சர்வதேச தரத்துடனான புகைப்படமொன்றை உள்ளடக்கிய தேசிய ஆட்பதிவு பெயர்ப் பட்டியலொன்றை நிறுவி, அதனடிப்படையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே சுமார் 30 வருடங்களாக நிலவிய யுத்தம் 2009 மே மாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் நாட்டின் எப்பாகத்திற்கும் பயணிப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியதைத் தொடர்ந்து, பிரஜையொருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு அமைய, தற்போது நடைமுறையிலுள்ள அடையாள அட்டையை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விநியோகிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நடைமுறைக்கு அமைய இரு மொழிகளில் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு முடியாதாதலால், இலத்திரனியல் அடையாள அட்டையை விநியோகிக்கும் நடைமுறை அமுலுக்கு வரும் வரை, இடைக்காலத் தீர்வொன்றிற்கு வரவேண்டி இருந்தது. இதற்கமைய, இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் நடைமுறைக்கான அடித்தளமாக இடைக்காலத் தீர்வொன்று, தற்போது நடைமுறையிலுள்ள அடையாள அட்டை விநியோகிக்கும் தொழிற்பாட்டிற்கு 2014 பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனிடையே 15 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பிரஜைகளினதும் விபரங்களை, வாழ்க்கைத் தரவுகளாகவும், உயிர்மானத் தரவுகளாகவும், கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தேவையான எல்லா நடவடிக்கைகளும் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, திட்டமிட்டதைப் பார்க்கிலும் கூடுதலான காலம் எடுத்ததினால், தரவுகளைச் சேகரிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

மேலும், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை முறையை நிறுவுவதற்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கான கேள்வியை கையளித்து அமுல் செய்வதற்கு, திட்டமிட்டதைப் பார்க்கிலும் கூடுதலான காலம் எடுத்ததினால், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் நடவடிக்கைக்காக, அதற்கான அடித்தளமாக அறிமுகம் செய்யப்பட்டு, தற்சமயம் அமுலிலுள்ள, இடைக்காலத் தீர்வுக்கு, தேவையான மேம்படுத்தல்களை செய்து, இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டத்தின் பணிகளை கட்டம், கட்டமாக அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டது.

### 3.2 கட்டம் 1

#### 3.2.1 தற்போதுள்ள அடையாள அட்டைக்குப் பதிலாக பிளாஸ்ரிக் அட்டையொன்றை விநியோகித்தல்

இடைக்காலத் தீர்வுக்கு அமைய, தற்போது பாவிக்கப்படுகின்ற சிங்கள மொழியில் மட்டும் கையால் எழுதுவதற்கான பாதுகாப்பு அட்டையைக் கொண்டு, சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அடையாள அட்டைகளை விநியோகிப்பது சிரமமாக உள்ளதால், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தகவல்கள் அடங்கிய பிளாஸ்ரிக் அட்டையொன்றை விநியோகித்தல்.

இடைக்காலத் தீர்வுத் தொழிற்பாட்டுக்கான மென்பொருள், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான தேவைகளுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்டுள்ளதால், அதனூடாக பிளாஸ்ரிக் அட்டையொன்றை விநியோகிக்க முடியுமாக இருக்கும். இதற்காக பிரதானமாக அச்சு இயந்திரங்களையும், பூர்வ அச்சிடப்பட்ட பிளாஸ்ரிக் அட்டைகளையும் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### 3.2.2 திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் ஊடாக இலத்திரனியல் மூலம் விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

2007.06.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, திணைக்களத்தின் பணிகளை பிரதேச, மாகாண மட்டங்கள் வரை பன்முகப்படுத்துவதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய தீவிலுள்ள 331 பிரதேச செயலகங்களிலும் திணைக்களத்தின் அலகுகள் நிறுவப்பட்டு, அந்த ஒவ்வொரு அலகிற்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் வீதம் இணைக்கப்பட்டுள்ளனர்.

புதிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு, தொலைந்து போன அடையாள அட்டைக்குப் பதிலாக இணைப் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு, மாறியிருக்கும் தகவல்களுக்கு அமைய அடையாள அட்டையை மாற்றிப் பெற்றுக் கொள்வதற்கு என்றவாறு இவற்றிற்குரிய எல்லா விண்ணப்பங்களையும், திணைக்களத்தின் பிரதேச அலுவலங்களுக்குச் சமர்ப்பித்து, அத் தகவல்களை இலத்திரனியல் ஊடகம் மூலம் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பொது மக்களுக்கும் மிக சௌகரியமாக அமையும். இந்த முறையை நிறுவுவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 02 கணினிகள், 02 வருடி எடுக்கும் இயந்திரங்கள் **(Scanner)**, அச்சு இயந்திரமொன்று **(Printer)** என்பன வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தகவல்களை இலத்திரனியல் ஊடகம் மூலம் பிரதான அலுவலகத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்காக தொடர்பாடல் இணைப்பு வசதிகள் **(Connectivity)** ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நிறுவப்பட்டுள்ளன.

#### 3.2.3 பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் நடைமுறையை அமுல் செய்வதற்காக இதுவரை அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மேலதிகமாக, கீழ்க் காணும் உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**i.** இடர் மீட்பு தரவு நிலையத்தை (Disaster Recovery Data Centre) அமைத்தல்.
**ii.** பிரதான தரவுக் களஞ்சியசாலையை பத்தரமுல்லை புதிய கட்டிடத்தில் அமைத்தல்.

#### 3.2.4 பிரஜைகளின் தகவல்களைச் சேகரித்தலும், அத் தகவல்களை இலத்திரனியல்மயப்படுத்தலும்

**i. 15 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளின் வாழ்க்கைத் தரவுகள், உயிர்மானத் தரவுகள், ICAO தரத்துடனான புகைப்படம் என்பவற்றை உள்ளடக்கியதாக தகவல்களைச் சேகரித்தல்.**

இத் தரவுகளைச் சேகரிப்பது தொடர்பில் 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள்/ உதவிப் பிரதேச செயலாளர்களுக்கு பயிற்சி

அளிக்கப்பட்டதுடன், தேவையான பொருட்கள், உபகரணங்கள் அனைத்தும் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

**ii. சேகரிக்கப்படுகின்ற தகவல்களை வழங்குனர் ஒருவரூடாக இலத்திரனியல்மயப்படுத்தல்**

இதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கள் அழைக்கப்பட்டு, வழங்குனர் ஒருவரைத் தெரிவு செய்து, அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவுடன், தரவுகளை இலத்திரனியல்மயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்பதுடன், 11 மாத காலப்பகுதிக்குள் இதனை முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**iii. தேசிய ஆட்பதிவு பெயர்ப் பட்டியலை நிறுவுதல்**

தரவுகளைச் சேகரிக்கும் பணிகளும், தரவுகளை இலத்திரனியல்மயப்படுத்தும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, இலத்திரனியல்மயப்படுத்தப்பட்ட ஒரு மில்லியன் பிரஜைகளின் தகவல்கள் மீது, தேசிய ஆட்பதிவு பெயர்ப் பட்டியலை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும்.

**3.3 கட்டம் 2 - தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்**

**3.3.1 இடைக்காலத் தீர்வு மென்பொருளை விருத்தி செய்தல்**

தகைமையுள்ள வழங்குனரொருவர் மூலம், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோக நடைமுறைக்கான இடைக்காலத் தீர்வுக்கான மென்பொருளை, உயிர்மானத் தகவல்கள், கைவிரல் அடையாளம், குடும்ப விபரங்கள் மற்றும் **ICAO** தரத்துடனான புகைப்படம் என்பவற்றை உட்சேர்த்து நவீனமயப்படுத்தல்.

**3.3.2 பிரதான தரவுக் களஞ்சியத்தையும், இடர் மீட்பு தரவு நிலையத்தையும் (Disaster Recovery Data Centre) நிறுவுதல்**

தகைமையுள்ள வழங்குனரொருவர் மூலம், சேவகம் **(Servers)**, யூ.பீ.எஸ். **(UPS)** மற்றும் தேவையான பிற பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இந்த தரவு நிலையங்கள் இரண்டையும் நிறுவுதல்.

**3.3.3 தரவு நிலையங்கள் இரண்டிற்கும் தொடர்பாடல் இணைப்புகளை நிறுவுதல்**

**3.3.4 தகைமையுள்ள வழங்குனரொருவர் மூலம், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை நடவடிக்கை அலகை (e-NIC Operations Unit), தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் வலையமைப்பு இணைப்புகளுடன் நிறுவுதல்**

**3.4 கட்டம் 3**

தேசிய ஆட்பதிவு பெயர்ப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, நவீன குறியீடுகளுடன் கூடிய இலத்திரனியல் தேசிய அட்டையை விநியோகித்தலும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையொன்றை வகுத்து அமுல் செய்தலும்.

4. 2016.01.01 தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கருத்திட்டத்தின் முன்னேற்றம்

| | பணி/ விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | நிதி முன்னேற்ற வீதம் (%) | பௌதீக முன்னேற்ற வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1. | பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் அபவிருத்தி | 249.38 | 156.48 | 62.7% | 54.2% |
| 2. | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 376.00 | 182.19 | 48.5% | 30% |
| 3. | பிரஜைகள் தரவுகளைச் சேகரித்தல் | 37.04 | 1.27 | 3.4% | 9.2% |
| 4. | பிரஜைகள் தரவுகளை இலத்திரனியல் மயப்படுத்தல் | 71.58 | - | 0% | 0% |
| 5. | அட்டை தனிநபர் வழிப்படுத்தல் | 200.00 | 76.0 | 38% | 80% |
| 6. | மூலதனச் செலவுகள் | 10.0 | - | 0% | 60% |
| 7. | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் அலகுகளையும், தரவு நிலையங்களையும் கண்காணித்தலும், இற்றைப்படுத்தலும். | 17.70 | 8.03 | 45.4% | 33.3% |
| 8. | ஆலோசகர்களும், வளவாளர்களும் | 16.45 | 12.09 | 73.5% | 100% |
| 9. | கருத்திட்ட முகாமையும், ஒழுங்கு முறைப்படுத்தலும் | 21.85 | 19.97 | 91.4% | 90% |
| | **மொத்தம்** | **1,000.0** | **456.02** | **45.6%** | **50.7%** |

## பயிற்சி நிகழ்ச்சித்திட்ட அறிக்கை (2016.01.01 இருந்து 2016.12.31 வரை)

**2016.01.01 தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பயிற்சி நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்**

| | பயிற்சிப் பாடநெறி | செலவு (ரூ.) | முன்னேற்றம் (பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1. | பொது நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பாடநெறி | 244,500.00 | 02 |
| 2. | தமிழ்மொழி பயிற்சிப் பாடநெறி | 703,000.00 | 112 |
| 3. | சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி | 5,540.00 | 40 |
| 4. | புதிய உதவி ஆணையாளர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி | 2,958.00 | 07 |
| 5. | நட்டங்களைப் பதிவு செய்தல்/ சேதங்கள் இழப்பீடு மற்றும் பதிவழித்தல் - திறன் அபிவிருத்தி நிதியம் | 25,500.00 | 03 |
| 6. | APFA நிறுவனத்தின் கணக்காய்வு விளக்கக் கோரிக்கைகளை குறைப்பது தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 5,000.00 | 01 |
| 7. | கணினி வலயமயப்படுத்தல் பாடநெறி - NIBM | 125,000.00 | 02 |
| 8. | இலஞ்சம் அல்லது ஊழலைத் தடுப்பது தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 76,800.00 | 233 |
| 9. | கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் | | 02 |
| 10. | கருத்திட்ட அறிக்கைகளை எழுதுதல் | | 01 |
| 11. | அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தல் | | 02 |
| 12. | கொள்முதல் மதிப்பீடு தொடர்பான பயிற்சிப் பாடநெறி | | 01 |
| 13. | சொற் தயாரிப்பு (MS Office/ MS Word) தொடர்பான உயர் பாடநெறி | | 01 |
| | **மொத்தம்** | **1,188,298.00** | **407** |

**இணைப்பு II**

**2015 ம் ஆண்டில் அடையாள அட்டை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்ட முன்னேற்ற அறிக்கை**

| இல | செயற்பாடு | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் / கடிதங்கள் | செயற்பாட்டில் உள்ள விண்ணப்பங்கள்/ கடிதங்கள் | நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் /கடிதங்கள் |
|---|---|---|---|---|
| 01 | சிக்கலான விண்ணப்பங்கள்<br>i. ஒரு அடையாள அட்டை இலக்கம் இருவருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருத்தல்.<br>ii. முதற் தடவையாக விண்ணப்பிக்கையில் இரு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.<br>iii. திருத்தம் செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கையில் அதனுடன் விகாரப்படுத்திய அடையாள அட்டையினை இணைத்தல் மற்றும் வேறு நபரின் அடையாள அட்டையினை இணைத்தல்.<br>iv. இரண்டு அடையாள அட்டை இலக்கங்களை வைத்திருத்தல்.<br>v. பிரதேச செயலாளரின் மேலொப்பம் சந்தேகத்திற்கிடமான விண்ணப்பங்கள்.<br>vi. விண்ணப்ப படிவங்ளுடன் சமர்ப்பிக்கப்படும் சந்தேகத்திற்கிடமான பிறப்புச் சான்றிதழ்களை பரீட்சிப்பதற்காக பதிவாளர் காரியாலயங்களுக்கு அனுப்புதல்.<br>vii. பழைய இலக்கங்கள் ஆவணப்படுத்தப்படுத்தப்பட்ட புத்தகங்களில் காணப்படும் குறைபாடு.<br>a) ஒரு அடையாள அட்டை இலக்கம் இரு இடங்களில் பதியப்பட்டிருத்தல்.<br>b) தவறான அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்டிருத்தல்.<br>c) அலுவலர்களினால் அடையாள அட்டை இலக்கங்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படாமையினால் ஏற்படும் தவறுகள்.<br>viii. போலி பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதனால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை. | 6370 | 2330 | 4040 |
| 02 | i. பிறநாடுகளிலுள்ள அல்லது பிறநாடுகளுக்கு செல்லவுள்ள நபர்களுக்கு தேவையான பொலிஸ் விடுகைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் இலக்கத்தினை உறுதிப்படுத்தல். | 38324 | - | 38324 |
| | ii. அடையாள அட்டை இலக்கங்ளை உறுதிப்படுத்தும் கடிதங்கள். | 644 | - | 644 |

| இல | செயற்பாடு | கிடைக்கப் பெற்ற விண்ணபப்பங்கள் / கடிதங்கள் | செயற்பாட்டில் உள்ள விண்ணபப்பங்கள்/ கடிதங்கள் | நிறைவு செய்யப்பட்ட விண்ணபப்பங்கள் /கடிதங்கள் |
|---|---|---|---|---|
| 03 | அடையாள அட்டை இலக்கத்தினை உறுதிப்படுத்தல் | | | |
| | i. விண்ணப்பதாரரின் வேண்டுகோளுக்கிணங்க அடையாள அட்டை இலக்கத்தினை உறுதிப்படுத்தல். | 1118 | 38 | 1080 |
| | ii. பாதுகாப்பு பிரிவிற்காக (பொலிஸ், ஜனாதிபதி விசாரணைப் பிரிவு, குற்றப் பரிசோதனை திணைக்களத்திற்கு, அரச புலனாய்வு சேவைக்கு ) | 2728 | - | 2728 |
| | iii. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக ( அரச , தனியார் வங்கிகள், தொழிலாளர் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியம் , குடி வரவு , குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம்) | 7142 | 109 | 7033 |
| | iv. வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் தொடர்பில்<br>a. IOM,தூதுவராலயம்,ஆணையாளர் அலுவலகம். | 39 | - | 39 |
| | v. நீதி மன்ற நடவடிக்கைகளுக்காக அடையாள அட்டை இலக்கங்களை பரிசீலித்தல். | 140 | - | 140 |
| 04 | போலி ஆவணங்களை இணைத்து அடையாள அட்டைகளை தயாரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்டிவங்கள் தொடர்பான ஒழுங்குமுறையான பரிசோதனை மேற்கொள்ள குற்றவியல் பரிசோதணை திணைக்களத்திற்கு முன்னிலைப்படுத்தியமை. | 48 | 48 | |

**இணைப்பு III**

**பணியாற்றொகுதி விபரம் 2016.12.31 வரை**

**பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபர அறிக்கை (பணியாற்றொகுதி)**

| பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | பற்றாக்குறை எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| பிரதி ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| ஆணையாளர் | 3 | 3 | - | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - | - |
| பிரதி/உதவி ஆணையாளர் | 19 | 15 | 4 | - |
| பிரதி/உதவி பணிப்பாளர் | 1 | - | 1 | - |
| கணக்காளர் | 1 | 1 | - | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 2 | 2 | - | - |
| மொழி பெயர்ப்பாளர் | 2 | - | 2 | - |
| வரவு செலவு உதவியாளர் (தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நியமிக்கப்படல் தொடர்பாக ) | 1 | 1 | - | - |
| அமுலாக்கல் உத்தியோகத்தர் | 65 | 64 | 1 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் ★ | 837 | 748 | 89 | - |
| பட்டதாரி பயிலுநர் ★ | - | 35 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 282 | 168 | 114 | - |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | 10 | 9 | 1 | - |
| சாரதி | 11 | 11 | - | - |
| அலுவலகப் பணியாளர் | 90 | 69 | 21 | - |
| உற்பத்தி உதவியாளர் * | 31 | 31 | - | - |
| ஆவண உதவியாளர் * | 10 | 10 | - | - |
| தற்காலிக தமிழ் இலிகிதர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) | 08 | 07 | 1 | |
| மொத்தம் | **1377** | **1143** | **234** | **-** |

* இப்பதவிகள் வகிப்போருக்கு அப்பதவிகளுக்கு தனிநபர் என்ற வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இப்பதவிகள் இல்லாது போகுமிடத்து ஏற்படும் வெற்றிடத்தினை அலுவலகப் உதவியார் எண்ணிக்கைக்கு கணிக்கப்படும். அதன்படி அலுவலக உதவியாளர் எண்ணிக்கை 131 ஆக வேண்டும்.

★ தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 748 பேருக்கு மேலதிகமாக இப்பதவிக்காக பட்டதாரி பயிலுநர்கள் 35 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 783 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இப் பட்டதாரி பயிலுனர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் நிரந்தர நியமனம் பெற்ற பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 54 ஆகும்.